| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்**<br>**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017**<br>**கிறிஸ்தவம் (N. R. C)** | |
| சுட்டெண் :- .......................................... | **தரம் : - 11** | **நேரம் :- 3. 00 மணித்தியாலம்** |

## பகுதி - I

❖ **கவனிக்க.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.**

(01) "ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர் விடும்" என மெசியாவின் பிறப்பு குறித்து இறைவாக்குரைத்தவர்

(1) எரேமியா (2) எசாயா (3) எசேக்கியேல் (4) மீக்கா

(02) திருமுழுக்கு யோவான் பற்றிய இறைவாக்கினர் மலாக்கியின் முன்னுரைப்பாக அமைவது

(1) "ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்"

(2) "கரடு முரடானவை சமதளமாக்கப்படும்"

(3) "குரலொன்று முழங்குகின்றது"

(4) "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன்"

(03) "நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர் அவரது பிறப்பால் பலர் மகிழ்ச்சியடைவர்" எனும் வாக்கு குறிப்பிடப்படுவது

(1) இயேசுவின் பிறப்பைக் குறித்து (2) எரேமியாவின் பிறப்பைக் குறித்து

(3) திருமுழுக்கு யோவானின் பிறப்பைக் குறித்து (4) ஈசாக்கின் பிறப்பைக் குறித்து

(04) "உன்னுடைய தேவனாகிய கர்த்தர் உன்னோடு இருப்பாராக" எனும் மன்றாட்டு கூறப்படும் சந்தர்ப்பம்

(1) பாஸ்கா விழாவின் போது (2) கூடாரத் திருவிழாவின் போது

(3) விருத்தசேதன வைபவத்தின் போது (4) அர்ப்பணிப்புச் சடங்கின் போது

(05) „அப்போஸ்தலர்' எனும் கிரேக்கச் சொல்லின் பொருள்

(1) அபிஷேகம் செய்யப்பட்டவர் (2) தெரிந்துகொள்ளப்பட்டவர்

(3) மீட்பவர் (4) அனுப்பப்பட்டவர்

(06) இயேசு எழுபத்திரண்டு சீடர்களை அனுப்பிய போது எடுத்துச் செல்லக் கூடாதவையாகக் கூறப்படுபவை

(1) பணப்பை, வேறு பை, மிதியடி (2) கைத்தடி, பை, உணவு

(3) பணம், உணவு, மிதியடி (4) கைத்தடி, பணப்பை, வேறு பை

(07) ,உமது நம்பிக்கை உம்மை மீட்டது. அமைதியுடன் செல்க' என இயேசு கூறியது
(1) கானானியப் பெண்ணுக்கு
(2) தீய ஆவியால் பீடிக்கப்பட்டு கூன் விழுந்த பெண்ணுக்கு
(3) 12 வருடங்கள் எதிர்பார்ப்பை இழந்த பெண்ணுக்கு
(4) பாவிப் பெண்ணுக்கு

(08) ஓய்வு நாளில் இயேசு செய்த புதுமையாக அமையாதது
(1) நீர்க்கோவை நோயாளி குணமாதல்
(2) கை சூம்பியவர் நலமடைதல்
(3) பார்வையற்றவர் பார்வை பெறல்
(4) முடக்குவாதமுற்றவர் நலமடைதல்

(09) உரோம பேரரசுக்கு எதிராக காலத்துக்கு காலம் எழுந்து நின்ற குழுவினரைத் தடுப்பதற்கு உரோம அரசுக்கு உதவி புரிந்த குழுவினர்
(1) பரிசேயர் (2) சதுசேயர்
(3) மறைநூல் அறிஞர் (4) தலைமைக் குருக்கள்

(10) "கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டிடத்திற்கு தலைக்கல் ஆயிற்று" எனும் இயேசுவின் வார்த்தை வெளிப்படுத்துவது
(1) இயேசுவின் பாடுகள், மரணம் என்பவற்றை
(2) இறைவாக்கினர்களின் மரணம் குறித்து யூதர்களின் பாவநிலையை
(3) சதுசேயரால் வெறுக்கப்பட்ட தாம் வெளிப்படும் நாள் தொலைவில் இல்லை என்பதை
(4) பரிசேயர், சதுசேயர் மக்களுக்கு இழைக்கும் அநீதிகளை

(11) இறைவனின் புனிதத்தன்மையை கருத்தில் கொள்ளாது செயற்பட்ட யூதமக்களைத் தட்டி எழுப்பும் வகையில் இயேசு செய்த அடையாளச் செயலாக அமைந்தது
(1) இறுதி இராவுணவு (2) கோவிலைத் தூய்மையாக்கியமை
(3) கழுதையின் மீது அமர்ந்து வந்தமை (4) பாவிகளோடு உணவருந்தியமை

(12) இயேசு சிலுவையில் கூறிய இறுதி வார்த்தை
(1) "எல்லாம் நிறைவேறிற்று"
(2) "தாகமாய் இருக்கிறது"
(3) "என் இறவைா என் இறவைா ஏன் என்னைக் கைவிட்டீர்"
(4) "பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்"

(13) "உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என இயேசு கூறியதன் பொருளாக அமைவது
(1) வர இருக்கும் பாவத்தால் நிறைந்த உலகில் அனுபவிக்க வேண்டிய துன்பங்கள் குறித்து
(2) சிலுவை மரணத்தின் மூலம் ஏற்பட இருக்கும் மாற்றம் குறித்து
(3) பிறருக்காக நாம் அழவேண்டிய காலம் நெருங்கிவிட்டதை உணர்த்தும் பொருட்டு
(4) இன்றைய உலகின் சுயநலம் போக்கும் மனிதநேயமற்ற நிலைமை குறித்தும்

(14) இயேசுவின் உடலைப் பிலாத்துவிடம் சென்று கேட்டவர்
(1) பேதுரு (2) நிக்கதேமு
(3) அரிமத்தியா ஊர் யோசேப்பு (4) நூற்றுவத் தலைவன்

(15) எம்மாவூர் பயணத்தில் குறிப்பிடப்படும் சீடன்

(1) பிலிப்பு (2) கிளேயோப்பா (3) பிரக்கோர் (4) தீமோன்

(16) கடுகுவிதை உவமையில் "வானத்துப் பறவைகள்" எனக் குறிப்பிடப்படுவது

(1) யூதர்கள் (2) பிற இனத்தவர்

(3) திருத்தூதர்கள் (4) இறைவாக்கினர்

(17) இயேசு தனது மூன்றாவது சோதனையில் அளித்த பதில் மூலம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம்

(1) இறைவனுக்குரிய கௌரவத்தை யாராலும் எப்போதும் எவருக்கும் உரித்தானது என இடமளித்தல் கூடாது

(2) இறைவனின் பலத்தின் மூலம் தமது பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கக் கூடாது

(3) இறைவனிடத்தில் முழு விசுவாசமுள்ளவர்கள் ஒரு போதும் அவரின் திட்டத்தையும் நோக்கத்தையும் பரீட்சித்துப் பார்த்தல் கூடாது

(4) நல்லதென்று காணப்படும் எதற்கும் திருப்தி கொள்ளாது உரிய நல்ல வழியை இறை விருப்பத்திற்கமைய தெரிந்தெடுத்தல் வேண்டும்

(18) இயேசு தோற்றம் மாறிய போது அவரின் தெய்வீகத் தன்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது

(1) அசரீரி ஒலித்தமை

(2) மோசேயும் எலியாவும் தோன்றியமை

(3) முகத்தோற்றம் வேறுபட்டு வஸ்திரம் வெண்மையாக பிரகாசித்தமை

(4) மேகம் மேலிட்டமை

(19) நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோயாளிகளைக் குணமாக்கும் அற்புதங்களின் எண்ணிக்கை

(1) 20 (2) 25 (3) 23 (4) 30

(20) இயேசு சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த ஜெபத்தில் உள்ளடங்கும் முக்கிய கருத்துக்களில் ஒன்றாக அமையாதது

(1) பிதாவாகிய கடவுளுக்கு கனமும் துதியும் செலுத்துதல்

(2) அனைத்துத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற வேண்டல்

(3) பாவ மன்னிப்பின் அவசியம் வலியுறுத்தப்படல்

(4) சோதனை வேளைகளிலும் தீங்கு வரும் போதும் பாதுகாப்பு வேண்டல்

(21) கி. மு 19ம் நூற்றாண்டில் பாபிலோனியாவிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக எந்த இடத்தை நோக்கி இடம் பெயர்ந்தனர்

(1) கானான் (2) எகிப்து (3) சமாரியா (4) எருசலேம்

(22) "இஸ்ரவேல் வரலாற்றில் அருட்பொழிவு செய்யப்பட்ட கூட்டத்தினர் அல்லாதவர்

(1) அரசர்கள் (2) இடையர்கள்

(3) இறைவாக்கினர் (4) குருக்கள்

(23) இஸ்ரவேல் மக்கள் மத்தியில் ஆயர் தொழில் செய்தவர்கள்

(1) காயீன், ஆபேல், ஆபிரகாம் (2) ஆபிரகாம், ஏசாயா, யாக்கோபு

(3) ஆபேல், யாக்கோபு, தாவீது (4) தாவீது, காயீன், ஆபேல்

(24) சேறு நிரம்பிய பாழுங்கிணற்றில் பல நாட்கள் உணவின்றி இருந்த இறைவாக்கினர்
(1) ஏசாயா (2) எலியா (3) எலிசா (4) எரேமியா

(25) "ஐரேனியா" எனும் கிரேக்கச் சொல்லின் பொருள்
(1) ஐக்கியம் (2) முழுமையான சமாதானம்
(3) சமத்துவம் (4) அர்ப்பணிப்பு

(26) "எவரும் என்னை ஆண்டவரே என சொல்லாதீர்கள். தலைவர் பணியாளனாக வேண்டும்" என்பதைப் பணியின் அடிப்படையாகக் கொண்டவர்
(1) அருட்தந்தை சந்திரா பர்னாந்து (2) அருட்தந்தை திஸ்ஸபாலசூரிய
(3) அருட்பணி பீற்றர் ஜெராட்டீசில்வா (4) இரண்டாம் ஜீவாம் பவுல்

(27) "நீ செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வழங்குகின்றேன்" என்று தனக்குத் தீங்கு செய்த அலிஅக்னாருக்கு கூறியவர்
(1) அருட்பணி பீற்றர் ஜெராட் சில்வா (2) மைக்கல் ரொட்றிகோ
(3) இரண்டாம் ஜீவாம் பவுல் (4) மாட்டின் லூதர்

(28) இயேசு கூறிய திராட்சைச்செடி உவமையில் கொடிகள் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(1) இயேசு (2) சீடர்கள் (3) தோட்டக்காரன் (4) நாம்

(29) பெந்தக்கோஸ்தே தினத்தில் ஏறக்குறைய எத்தனை பேர் திருமுழுக்குப் பெற்று சபையில் சேர்க்கப்பட்டனர்
(1) மூவாயிரம் (2) இரண்டாயிரம்
(3) நான்காயிரம் (4) ஆயிரம்

(30) இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களுள் அடங்காதவர்
(1) பேதுரு (2) பவுல் (3) ததேயு (4) தோமா

(31) பரிசேயர் என்பதன் அர்த்தம்
(1) அனுப்பப்பட்டவர் (2) பயிற்றப்பட்டவர்
(3) பிரிக்கப்பட்டவர் (4) தெரிந்தெடுக்கப்பட்டவர்

(32) "அவர் பிறஇனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக்கொண்ட கருவியாய் இருக்கிறார்" என யாரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது
(1) இயேசுவை (2) மோசேயை (3) பேதுருவை (4) பவுலை

(33) முதன் முதல் யூதரல்லாத பிற இனக் கிறிஸ்தவர்கள் அங்கம் வகித்த கிறிஸ்தவசபை
(1) சீரிய அத்தியோகியாவின் சபை (2) கொரிந்து சபை
(3) பிசிதியா அந்தியோக்கியர் சபை (4) தெசலோனிக்கேயர் சபை

(34) செக்கியு பவுல் எனும் எதிரான ஆட்சியாளர் இருந்த பட்டணம்
(1) பாப்போ (2) சாலமி (3) பெருகை (4) லீஸ்திரா

(35) "தெய்வங்கள் மனித உருவில் தம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன" என்று பவுலையும் பர்னபாவையும் குறித்துக் கூறப்பட்ட இடம்
(1) பாப்போ (2) இக்கோனியா
(3) லீஸ்திரா (4) அந்தியோக்கியா

(36) எருசலேம் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்லாதது
(1) பரந்தமையை விலக்குதல்
(2) சிலைகள் தொடர்பான தீட்டானவற்றைத் தவிர்த்தல்
(3) கழுத்து நெரிக்கப்பட்டு செத்தவை, இரத்தத்தை உணவாகக் கொள்வதைத் தவிர்த்தல்
(4) விருத்தசேதனம் செய்தலைத் தவிர்த்தல்

(37) கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பு கிறிஸ்துவின் சபைக்குக் காட்டும் அன்பைப் போல் காணப்பட வேண்டும் என எழுதப்பட்டுள்ள திருமுகம்
(1) கொரிந்தியர்
(2) எபேசியர்
(3) உரோமையர்
(4) கலாத்தியர்

(38) சமூகத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழும் வேளையில் செயற்பட வேண்டிய முறைகள் பற்றி திருவிவிலியத்தில் கூறப்பட்டவை அல்லாதது
(1) ஒழுக்கம் உள்ளவர்களாக இருத்தல்
(2) அதிகாரிகளுக்கும் ஆட்சியாளருக்கும் கீழ்ப்படியாதிருத்தல்
(3) ஏழை பணக்காரன் என தராதரம் பாராது இருத்தல்
(4) பிறரைக் குறை சொல்லாதிருத்தல்

(39) இறைவன் எமக்கு ஆற்றல்களைத் தந்துள்ளது
(1) எமது சொந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு
(2) பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு
(3) கிறிஸ்துவின் உடலுடன் இணைந்து இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதற்கு
(4) எமது சமூகத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு

(40) ஏழ்மை நிலையைப் போக்க நாம் செய்ய வேண்டியவை
(1) ஏழைகளுக்குப் பெலனாக இருப்பது
(2) வளங்களை முறையாகப் பகிர்தல்
(3) சோர்வடையாமல் செயற்படுவது
(4) மேற்கூறிய யாவும் சரியானவை

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) **சுருக்கமான விடை தருக.**

(i) “இயேசு தமது வாழ்வில் யூதசம்பிரதாயங்களை கடைப்பிடித்து வாழ்ந்தார்” என்பதற்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.

(ii) மெசியாவின் வருகைக்காக காத்திருந்து திருக்கோவிலில் எப்போதும் வேண்டிக் கொண்டிருந்தவர் யார்? அவர் எவ்வாறு கடவுளுடன் தொடர்பு கொண்டிருந்தார்?

(iii) யூத மதத்தவருக்கு திருமுழுக்கு யோவானின் அறிவுரை யாது?

(iv) இயேசு, பன்னிரு சீடர்களை அனுப்பிய போது அவர்களுக்கு வழங்கிய அதிகாரங்கள் எவை?

(v) “நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள்” என இயேசு யாரைக் கண்டித்தார்? அதன் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்து யாது?

(vi) இயேசுவைத் தனிப்பட்ட முறையில் சந்தித்த இருவரைக் குறிப்பிடுக.

(vii) பவுலின் முதல் மறைத்தூதுப் பயணத்தில் அவருடன் சென்ற இருவரைக் குறிப்பிடுக.

(viii) பத்துக் கட்டளைகளில் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவை எடுத்துக் காட்டும் கட்டளைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(ix) துன்புறும் ஊழியனின் இயல்புகள் இரண்டு தருக.

(x) பெந்தக்கோஸ்து தினத்தன்று இடம்பெற்ற நிகழ்வுகள் இரண்டு தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

(02) (i) நசரேத்து அறிக்கையின்படி மெசியாவின் பணிகள் இரண்டு தருக.

(ii) நசரேத்து அறிக்கைக்கு எதிராக செயல்பட்டோருக்கு பதிலளிக்கும் விதமாக இயேசு முன்வைத்த வரலாற்று சம்பவங்கள் இரண்டையும் குறிப்பிடுக.

(iii) நசரேத்து அறிக்கை மூலம் கிறிஸ்தவ திருச்சபையிலும் சமூகத்திலும் உமக்கு கிடைக்கும் பணியில் நீர் எதிர்நோக்கும் சவால்கள் இரண்டை முன் வைத்து அவற்றின் மத்தியில் எவ்வாறு செயல்படுவீர் என்பதை விபரிக்குக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(03) (i) இறையரசின் கொள்கைகளை வெளிப்படுத்தும் உவமைகள் இரண்டு தருக.

(ii) பெரிய விருந்து உவமை மூலம் பெறப்படும் முக்கிய கருத்துக்கள் மூன்றினை முன்வைக்குக.

(iii) இன்றைய உலகில் இறையரசின் வளர்ச்சிக்கு தடையாக அமையும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அத்தகைய தடைகளை நீக்க மேற்க்கொள்ளக் கூடிய வழிமுறைகளை முன்வைக்குக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(04) (i) பவுலின் இரண்டாவது மறைதூதுப் பணியின் போது அவருடன் சென்ற பயணத் தோழர்கள் யாவர்?

(ii) இரண்டாம் மறைதூதுப் பணியின் போது சென்ற இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(iii) இரண்டாம் மறைதூதுப் பயணத்தின் போது இடம்பெற்ற முக்கிய சம்பவம் ஒன்றை விபரித்து அதன் மூலம் நீர் கற்றுக்கொண்ட படிப்பினையையும் குறிப்பிடுக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(05) (i) மீக்கா இறைவாக்கினரின் முக்கிய படிப்பினையாக அமைவது யாது?

(ii) "தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் ஈட்டிகளைக் கருக்கரி வாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்" என்பதன் மூலம் விளக்கப்படுவது யாது?

(iii) "சமாதானம் ஏற்படுத்துகின்றவர்கள் கடவுளுடைய பிள்ளைகள்" என்பதற்கிணங்க, இன்றைய காலப்பகுதியில் சமாதானத்தை ஏற்படுத்த இடையூறாக விளங்கும் விடயங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, சமாதான உலகை ஏற்படுத்த மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் இரண்டையும் முன்வைக்குக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(06) விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(i) ஆமோஸ் இறைவாக்கினரின் பணி

(ii) நல்லாயன்

(iii) ஆதிக் கிறிஸ்தவ சபை

(iv) திருச்சட்டத்தின் மையம் அன்பு

(2 x 5 = 10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education